# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## OS.No. 06/2009

## வழக்கு சாட்சி PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திருகுமரன்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : வெற்றிவேல் பிள்ளை | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : வில்பட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 44/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 17.06.2026 |

<u>முதல் விசாரணை :</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன் . வாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 26.05.1956 தேதியிட்ட கிரய சாசன பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. தாவா சொத்து பழைய சர்வே எண் 215 பட்டா (தீர்வை ரசீது) அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. தாவா சொத்து தொடர்ப்புடைய செட்டில்மெண்ட் பட்டா அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 04.07.1969 ம் தேதியிட்ட விடுதலை பத்திரம் அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. வில்பட்டி கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய புல எண் ஒப்புமை சான்று (Correlation Statement) **வா.சா.ஆ.5** ஆகும்.

6. தாவா சொத்து தொடர்ப்புடைய புல வரைப்படம் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. தாவா சொத்து தொடர்ப்புடைய புதிய சர்வே எண்ணுக்கு வழங்கப்பட்ட பட்டா (தீர்வை குறிப்பிடப்பட்டது) **வா.சா.ஆ.7** ஆகும்.

8. தாவா சொத்து தொடர்ப்புடைய வில்லங்க சான்று (எண்ணம் 2) அசல் **வா.சா.ஆ.8** ஆகும்.

9. தாவா சொத்துக்கு அருகில் உள்ள சொத்து தொடர்பாக எனது தந்தை மேல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்ப்புடைய தொடர்ப்புடைய பிராது நகல் **வா.சா.ஆ.9** ஆகும்.

10. மேற்சொன்ன அசல் வழக்கின் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனுவின் நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.

11. அசல் வழக்கு எண் 72/2007 என்ற வழக்கில் 86/2007 என்ற இடைக்கால மனுவின் என் தந்தை வெற்றிவேல் பிள்ளைக்கு நீதிமன்றத்தால் சர்வு செய்யப்பட்ட உத்தரவின் நகல் **வா.சா.ஆ.11** ஆகும்.

12. என் தந்தை வெற்றிவேல் பிள்ளைக்கு மீது தாக்கல் செய்யப்பட்ட கேவிட் மனுவின் மனுதாரர் நகல் **வா.சா.ஆ.12** ஆகும்.

13. தாவா சொத்து தொடர்ப்புடைய வீட்டின் என் தந்தை பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.13** ஆகும்.

14. தாவா சொத்து தொடர்ப்புடைய என் தந்தை பெயரில் உள்ள கணினி பட்டா சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.14** ஆகும்.

15. அசல் வழக்கு எண் 72/2007 ல் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.15** ஆகும்.

16. அசல் வழக்கு எண் 72/2007 ல் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.16** ஆகும்.

**(பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டதால் குறுக்கு விசாரணை இல்லை )**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.06.17 15:24:05 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.